# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA 3308/விசாரணை/E/2024</u>**

திரு.V.R.கிருஷ்ணகுமார் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல்அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர், சென்னை-39. .. பொது அதிகார அமைப்பு

******

**<u>இறுதி ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 05.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பெரம்பூர் வட்ட சார் ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் 20.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில், இவ்வாணையத்தால் 10.04.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

> *3. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்தின் 05.01.2026 தேதியிட்ட உத்தரவின்படி, <u>மேல்முறையீட்டாளரின் 08.11.2023 தேதியிட்ட புகார் மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலை</u> மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையுடன் கூடிய நகலை இணைத்து அறிக்கையாக 22.05.2026 அன்று ஆணையத்தில் பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் ஆஜராகி தவறாமல் சமர்ப்பிக்குமாறு பெரம்பூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் பெரம்பூர் வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.*

2. மேல்முறையீட்டாளர் 22.05.2026 தேதியிட்டு இவ்வாணையத்தில் சமர்ப்பித்துள்ள கடிதத்தில், ஆணையத்தின் உத்தரவுப்படி தனது 08.11.2023 தேதியிட்ட புகார் மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தெரிவித்த தகவல் வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் 22.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 21.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் பதிவஞ்சலில் 22.05.2026 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேலும் அவர், மேல்முறையீட்டாளரது 08.11.2023 தேதியிட்ட கோரிக்கை தொடர்பாக மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு 01.09.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வடசென்னை வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பட்டு, வருவாய் கோட்டாட்சியரால் 23.02.2206-ன்படி இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு 24.02.2026 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார். மேல்முறையீட்டாளரது 18.11.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய அவரது 08.11.2023 தேதியிட்ட புகார் மனு தொடர்பாக, மேல்முறையீட்டாளருக்கு 22.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வருவாய் கோட்டாசியருக்கு அனுப்பிய பரிந்துரைக் கடிதம் தகவலாக பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுத் தகவல் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆகவே, மேல்முறையீட்டாளர் கோரியவாறு அவரது 08.11.2023 தேதியிட்ட புகார் மனு மீது வருவாய் கோட்டாட்சியரால் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டு, அது குறித்த தகவல்கள் மேல்முறையீட்டாளருக்கு 21.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 22.05.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்குஎண்.SA 3308/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர், சென்னை-39.

திரு.V.R.கிருஷ்ணகுமார்
88A-59 துளசிங்கம் தெரு,
பெரம்பூர், சென்னை-11.

Copy to: File

RJ/PS 1.6